# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை-2021
*(நிலையறிபரீட்சை)*
## General Certificate of Education (ord – Level) Examination – 2021

| | | |
|---|---|---|
| தரம் :- 11<br>Grade :- 11 | குடியியற்கல்விI,II<br>Civic EducationI,II | நேரம் :-<br>3மணித்தியாலம் |
| சுட்டெண்:............................... | 62 \| T \| I,II | மேலதிக வாசிப்பு நேரம் :-<br>10 நிமிடம் |

**வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

### குடியியற்கல்வி I

கவனிக்குக.

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1(, (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

1) ஐரோப்பாவில் ஆரம்பகாலத்தில் தோற்றம் பெற்ற தேசிய அரசுகள் இரண்டைக் கொண்ட விடை எது?
   1. இங்கிலாந்து, ஸ்பெயின்
   2. ஸ்பெயின், இத்தாலி
   3. ஜேர்மனி, இங்கிலாந்து
   4. இத்தாலி, ஜேர்மனி

2) பின்வருவனவற்றுள் நேரடி ஜனநாயக ஆட்சியின் பிறப்பிடமாக கருதப்படும் நகரம் எது?
   1. உரோம்
   2. லண்டன்
   3. ஸ்பாட்டா
   4. எதேன்ஸ்

3) பின்வருவனவற்றுள் அரசின் அடிப்படைப்பண்புகளில் ஒன்றாக குறிப்பிடக்கூடியது.
   1. அரசியல் யாப்பு
   2. மக்கள் தொகை
   3. நீதிமன்றம்
   4. அரசியல்கட்சி

4) மனிதன் தனது சமூக வாழ்க்கையை செவ்வனே கொண்டு செல்லத் தேவையான நிபந்தனைகள் எவ்வாறு அழைக்கப்படும்.
   1. கடமைகள்
   2. சமத்துவம்
   3. சுதந்திரம்
   4. உரிமைகள்

5) பின்வருவனவற்றுள் இருகட்சி முறையைக் கொண்ட நாடுகள் இரண்டை சரியாகக்காட்டும் விடையைத் தெரிவு செய்க
   1. இலங்கை,இந்தியா
   2. பிரான்ஸ்,அவுஸ்திரேலியா
   3. ஐக்கியஅமெரிக்கா, பிரித்தானியா
   4. கியூபா,வடகொரியா



kalvi.lk

6) பாராளுமன்ற அரசாங்க முறையில் அரசியல் நிர்வாகத்தைச் செயற்படுத்துபவர்கள்.
   1. ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சரவை  2. சபாநாயகர் உள்ளிட்ட அமைச்சரவை
   3. பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை  4. ஜனாதிபதியும், பிரதமரும்

7) ஒரு ஜனநாயக நாட்டில் வாழும் மக்கள் தங்களுக்கு விருப்பமான அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டுமாயின் அங்கு இருக்க வேண்டிய முக்கிய விடயம்
   1. தனிநபர் ஆற்றல்களை அதிகரிக்க வேண்டும்
   2. அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சனம் செய்ய வேண்டும்
   3. அரசியல் விழிப்புணர்வுடன் மக்கள் செயற்படவேண்டும்.
   4. எதிர்க்கட்சியின் பலம் சிறப்பாக இருக்க வேண்டும்

8) நேரடி ஜனநாயக ஆட்சி முறையை தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளில் **அடங்காத** விடை எது?
   1. சமூகத்தேவை பூர்த்தி செய்யும் நிலமை காணப்படல்
   2. அரசுகள் அதிகளவு சனத்தொகையைக் கொண்டிருத்தல்
   3. அரசுகளின் நிலப்பரப்பு விசாலமாகக்காணப்படல்
   4. மக்கள் அனைவரையும் ஓரிடத்தில் ஒன்று திரட்டுவதில் உள்ள சிரமம்.

9) 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின்படி 13ஆவது சீர்திருத்தத்தின் படி தயாரிக்கப்பட்ட நிரல்பட்டியலுக்கு அமைய மத்திய,மாகாண அரசுகள் இணைந்து நிறைவேற்றும் அதிகாரம் யாது?
   1. சனத்தொகை மற்றும் புள்ளிவிபரங்கள்
   2. குடிவரவு மற்றும் குடியகல்வு
   3. வெளிவிவகாரநடவடிக்கைகள்
   4. விவசாயமும் கமநலசேவையும்

10) மாகாணசபை ஒன்றின் அமைச்சரவை மற்றும் மாகாணசபையின் நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் கொண்டவர்
   1. மாகாணத்தின் முதலமைச்சர்  2. மாகாண ஆளுநர்
   3. மாகாணத்தின் சபாநாயகர்  4. ஜனாதிபதி

11) சுவிற்சர்லாந்தின் சமஷ்டி முறையின் அதிகாரங்களை செயற்படுத்தும் போது பிரச்சினை ஒன்று உருவாகுமானால் அதனை தீர்க்கும் அதிகாரம் கொண்ட அமைப்பு எது?
   1. கென்ரன்  2. சமஷ்டி சபை
   3. தேசியசபை  4. சமஷ்டி பேரவை

12) அதிகாரப்பகிர்வின்போது அவதானிக்கக்கூடிய சிறப்பு அம்சங்களில் **பொருத்தமற்ற** விடை எது?
   1. எழுதப்பட்ட அரசியல் யாப்பு காணப்படும்
   2. வேற்றுமையில் ஒற்றுமை கட்டியெழுப்பப்பட்டிருக்கும்
   3. இரண்டு வகையான அதிகாரமையங்கள் காணப்படும்
   4. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரத்தை மீளப்பெறக்கூடியதாக இருத்தல்

13) "வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துதல்" எனும் தொனிப்பொருளில் பன்மைப் பண்பாட்டுத் தன்மையை மிகவும் பயனுடையதாகக்கொண்ட ஆசியநாடு.
   1. நேபாளம்  2. இந்தியா  3. சிங்கப்பூர்  4. தாய்லாந்து

14) நாடொன்றின் சமூகநீதி வீழ்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணி எது?
   1. இலஞ்சமும்,ஊழலும் அதிகரித்தமை
   2. பொதுநிர்வாகம் வினைத்திறனுடன் செயற்படல்
   3. பொதுச்சேவைகள் அரசியல் மயமாக்கப்பட்டமை
   4. அரச கொள்கை உருவாக்கத்தில் மக்கள் பங்களிப்பு காணப்படல்



kalvi.lk

15) பின்வருவனவற்றுள் நல்லாட்சி நிலவும் நாடொன்றில் அடிப்படைப்பண்பாகக் குறிப்பிடக் கூடியது
1. சுதந்திரமும் சமூகநீதியும் நிலைநாட்டப்படல்
2. வளங்களை வினைத்திறனற்ற வகையில் பயன்படுத்துதல்
3. தொழிற்சங்கங்களை நிறுவிச் செயற்படுதல்
4. தனியார் நிறுவனங்களை அரசமயமாக்கல்

16) பின்வருவனவற்றுள் பொருளாதாரப்பண்டம் எது?
1. நீர் 2. வளி 3. மருந்துப் பொருட்கள் 4. சூரியஒளி

17) பின்வருவனவற்றுள் மூலதனப் பொருளையும் , இடைநிலைப் பொருளையும் முறையே கொண்டிருக்கும் விடை எது?
1. உணவும்,ஆடைகளும் 2. வாகனங்களும்,உரவகையும்
3. சீமேந்தும், கட்டிடங்களும் 4. மருந்துவகையும், வீட்டுத்தளபாடங்களும்.

18) பின்வருவனவற்றுள் வடஅமெரிக்க சுதந்திரவர்த்தக உடன்படிக்கையில் ( NAFTA) அங்கத்துவம் **பெறாதநாடு** எது?
1. கனடா 2. மெச்சிக்கோ
3. பிரேசில் 4. ஐக்கியஅமெரிக்கா

19) தனியார் துறையினரின் முதலீடுகள் ஊக்குவிக்கப்படுவதோடு உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு விசேட அனுசரணை வழங்கும் பொருளாதாரமுறை எது?
1. சந்தைப்பொருளாதாரமுறை 2. முதலாளித்துவப்பொருளாதாரமுறை
3. சமதர்மப் பொருளாதாரமுறை 4. கலப்புப்பொருளாதாரமுறை

20) உலக மயமாக்கலினால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள **சாதகமான** தாக்கம் எது?
1. மூளைசாலிகள் வெளியேற்றம் துரிதமடைதல்
2. உள்நாட்டுக்கைத் தொழில் துறை பாதிப்படைதல்
3. பொருளாதாரம் பன்முகப்படுத்தப்படல்
4. தேசிய வளங்கள் சுரண்டப்படல்

21) ஜோஹான் கல்டுனின் மோதல் முக்கோணியில் மோதலை உருவாக்கும் உளவியல் காரணியாகக் குறிப்பிடக்கூடியது
1. சூழ்நிலை 2. மனப்பாங்கு
3. திறன்கள் 4. நடத்தைகள்

22) கணவன்,மனைவி, தாய், தந்தை, பிள்ளைகளிடையே பல்வேறு காரணங்களால் ஏற்படும் மோதல்கள் எவ்வாறு அழைக்கப்படும்
1. தனியாள் மோதல் 2. சமூகமோதல்
3. அரசியல் மோதல் 4. குடும்பத்தினுள் மோதல்

23) மோதலைத் தவிர்த்துக் கொள்வது தொடர்பாக தனியாள் ஒருவரிடம் காணப்படவேண்டிய சமூகப் பண்பு எது?
1. பிறரைமதித்தல் 2. தெளிவாக முடிவெடுத்தல்
3. ஆக்கபூர்வ சிந்தனை 4. தொடர்பாடலை பயனுடையதாக்கல்

24) மூன்றாவது தரப்பினர் மூலம் மோதலுக்குள்ளான இரு தரப்பினரையும் சம்மதிக்கச் செய்யும் மோதல் தீர்வு முறை எது?
1. தீர்ப்பு கூறல் 2. இணக்கப்பாடு
3. உடன்படுதல் 4. பேரம்பேசுதல்



kalvi.lk

25) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் அரசியல் யாப்புக்கு முரண்படாததன்மையை பாதுகாக்கும் அதிகாரம் கொண்டவர்.
1. பிரதமநீதியரசர்
2. சட்டமாஅதிபர்
3. சொலிசிட்டர் ஜெனரல்
4. நீதி அமைச்சர்

26) குற்றவியல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றங்களை மட்டும் கொண்டுள்ள விடையைத் தெரிவு செய்க.
1. சிறுவர்துஷ்பிரயோகம்,போதைப்பொருள் விற்பனை
2. காணிப் பிரச்சினைகள்,விவாகரத்து
3. கற்பழிப்பு, வணிகநடவடிக்கைகள்
4. சிறுவர்துஷ்பிரயோகம் , காணிப்பிரச்சினைகள்

27) நீதிமன்றங்களில் குற்றவியல் வழக்குகளைத்தாக்கல் செய்யும் அதிகாரம் பெற்ற நிறுவனம்.
1. சிறைச்சாலைகள் திணைக்களம்
2. சட்டமாஅதிபர் திணைக்களம்
3. குற்றவியல் விசாரணைத் திணைக்களம்
4. இலங்கை இராணுவப்படை

28) இலங்கையில் 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட அமைப்பு எது?
1. நீதிச்சேவை ஆணைக்குழு
2. கல்விச்சேவை ஆணைக்குழு
3. அரசாங்கசேவை ஆணைக்குழு
4. மனித உரிமைகள் ஆணைக்குழு

29) நிறைவேற்று மற்றும் நிர்வாக நடவடிக்கைகளின் போது பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படல் தொடர்பாக கவனம் செலுத்துவதற்காக உருவாக்கப்பட்ட பதவிநிலை எது?
1. ஒம்புட்ஸ்மன்
2. சபாநாயகர்
3. சட்டமா அதிபர்
4. பிரதமநீதியரசர்

Education

30) பின்வருவனவற்றுள் ஒற்றை ஆட்சி நிலவும் நாடுகளைக் கொண்ட விடைத் தொகுதி எது?
1. இந்தியா, நேபாளம், பிரான்ஸ்
2. நேபாளம், ஜப்பான், ஐக்கிய இராச்சியம்
3. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், பாகிஸ்தான்
4. இந்தியா, ஐக்கியஅமெரிக்கா,பிரான்ஸ்

31) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் செயற்பட்ட நிர்வாக அலகுகளில் **அடங்காதது** எது?
1. திஸாவை
2. பற்று
3. கோரளை
4. ரட்ட

கல்வி අධ්‍යාපන

32)
A. - வினாக்களைத் தொடுத்தல்
B. - சட்டத்திற்கு விளக்கமளித்தல்
C. - அரசியல் யாப்பைப் பாதுகாத்தல்
D. - சட்டமியற்றுதல்
E. - அரசாங்க சேவை நிர்வாகம்

1978ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு யாப்பின் படி சட்டத்துறையான பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் இரண்டினைக் கொண்டிருக்கும் விடை எது?
1. A யும்B யும்
2. A யும்D யும்
3. B யும்C யும்
4. B யும்D யும்

33) 1978ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு யாப்பின்படி நீதிமன்றங்களின் அதிகாரங்கள்,மற்றும் பணிகள்இரண்டினைக்கொண்டிருக்கும் விடை எது?
1. B யும்C யும்
2. B யும்D யும்
3. B யும்E யும்
4. A யும்C யும்



kalvi.lk

34) இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொது உபயோக சேவையினுள் அடங்குவது.
1. வெள்ளநீரினை அகற்றுவதற்கான வடிகால்களை அமைத்தல்
2. பொதுமலசலகூடங்களை அமைத்து பரிபாலித்தல்
3. மக்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்
4. நீர்விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

35) தனிப்பட்ட சொத்துக்களை வைத்திருத்தல் மற்றும் போதியளவு வாழ்க்கைத்தரத்தினை அனுபவித்தல், ஆகிய உரிமைகள் அடங்கும் மனித உரிமைத்தொகுதியானது.
1. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள்
2. அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகள்
3. பொருளாதார மற்றும் சமூககலாசார உரிமைகள்
4. குடியியல் மற்றும் கலாசார உரிமைகள்

36) ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின்படி உறுப்புரிமை 7 இல் குறிப்பிடப்படும் முக்கியமான விடயம்.
1. 18 வயதுக்குக் குறைந்தவர்கள் பிள்ளைகள்அல்லது சிறுவர்கள்
2. வாழ்வதற்கான உரிமைகள் அனைத்துப்பிள்ளைகளுக்கும் உண்டு
3. குழந்தை பிறந்ததும் பதிவு செய்யப்படல் வேண்டும்.
4. கல்வியைப் பெற்றுக்கொள்ளும் உரிமை அனைத்து சிறார்களுக்கும் உண்டு

37) மனிதநடவடிக்கைகளால் புவியில் ஏற்படும் சூழல் பிரச்சினைகளை மட்டும் கொண்டுள்ள விடையினைத் தெரிவு செய்க.
1. வெள்ளப்பெருக்கு, பாலைவனமாதல்
2. பாலைவனமாதல்,அமிலமழை பொழிதல்
3. புவியதிர்வு,வெள்ளப்பெருக்கு
4. புவியதிர்வு, பனிக்கட்டிகள் உருகுதல்

38) சமயங்கள்,சாதிகள்,மரபுரிமைகள், உரிமைகள்,கடமைகள், போன்றவை உள்ளடங்கும் சமூக சூழலானது.
1. பௌதிகக் கூறுகளால் கட்டியெழுப்பப் பட்டவையாகும்.
2. மனிதனின் தலையீடின்றி உருவான கூறுகளாகும்
3. இயற்கைச் சூழலில் இருந்து உருவாக்கப்பட்ட கூறுகளாகும்.
4. மனிதனின் தலையீட்டால் கட்டியெழுப்பப்பட்டவையாகும்.

39) பின்வரும் வினாவில் ''அ'' நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் சீர்திருத்தங்களை ''ஆ'' நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் மாற்றங்களுடன் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| ''அ'' | ''ஆ'' |
|---|---|
| 1. டொனமூர் (1931) | A நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி உருவாக்கப்பட்டமை |
| 2. சோல்பரி (1947) | B உயர்நீதிமன்றம் அமைக்கப்பட்டமை |
| 3. முதலாம் குடியரசு (1972) | C ஆளுநர் நாயகம் பதவி உருவாக்கப்பட்டமை |
| 4. இரண்டாம் குடியரசு (1978) | D சட்டவாக்கக்கழகம் தோற்றுவிக்கப்பட்டமை |
| | Eஅரசுக்கழகம் உருவாக்கப்பட்டமை |

1. DCBA
2. DCAB
3. ECBA
4. ECAB



kalvi.lk

40) A,B ஆகிய கூற்றுக்களை கவனிக்க

A. இலங்கையின் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்ட அனைத்து உரிமைகளும் அடிப்படை உரிமைகளாகும்.

B. அனைத்து மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது

மேற்படி கூற்றுக்களில்

1. A உண்மையானது B பொய்யானது
2. A பொய்யானது B உண்மையானது
3. A, யும்,B யும் உண்மையானது
4. A யும்,B யும், பொய்யானது

(40X1=40 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை-2021
*(இரண்டாம் தவணை)*

## General Certificate of Education (ord – Level) Examination – 2021 (Second Term)

| தரம் :- 11 | குடியியற்கல்விI,II<br>Civic Education I,II | 62 TI,II |
|---|---|---|

**குடியியற்கல்விII**

- ❖ **முதலாம்** வினா கட்டாயமானது.
- ❖ **முதலாம்**வினாவுக்கும் வேறு **நான்கு** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
- ❖ எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1.
i. தேசிய அரசுகள் பலமடைவதற்கு காரணமான **இரண்டு** அரசியல் சிந்தனையாளர்களைக் குறிப்பிடுக.
ii. சுவிற்சர்லாந்தில் நடைமுறையிலுள்ள அரசகருமமொழிகள் **இரண்டினைக்**குறிப்பிடுக.
iii. பன்மைப்பண்பாட்டின் சிறப்பான செயற்பாட்டிற்கு நபர் ஒருவர் வளர்த்துக் கொள்ளவேண்டிய பண்புகள் **இரண்டு** எழுதுக.
iv. உற்பத்தி தொடர்பில் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** பிரதானமான நுட்பங்களைக் குறிப்பிடுக.
v. காப்பாற்றுதல் அல்லது மீட்கும் முறைமூலம் மோதலைத்தீர்க்கும் சந்தர்ப்பங்கள் **இரண்டு** எழுதுக.
vi. சட்டமா அதிபரின் பணிகளுக்கு உதவிபுரியும் அதிகாரிகள் **இருவரைக்** குறிப்பிடுக.
vii. இலங்கையில் பொலநறுவைக் காலத்தில் நடைமுறையில் இருந்த நிர்வாகப்பிரிவுகள் **இரண்டினைக்**குறிப்பிடுக.
viii. வங்காளவிரிகுடாவைச்சூழவுள்ளநாடுகளில் பொருளாதாரஒத்துழைப்புஅமையம் (BIMST-EC) இல் அங்கத்துவம் பெற்றுள்ள **இரண்டு**நாடுகளைப் பெயரிடுக.
ix. சனநாயகசமூகத்தில் பிரசைகளால் நிறைவேற்றக்கூடிய **இருபிரதானகடமைகளைப்** பெயரிடுக.
x. 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசுயாப்பில் கீழ் நிறைவேற்றுத்துறையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் **இரண்டினைக்**குறிப்பிடுக.

(2X10=20 புள்ளிகள்)

**2.“ஜனநாயக ஆட்சி அனைவரது உரிமைகளையும் பெற்றுக்கொள்ளும் ஆட்சி நடவடிக்கையாகும்.”**
i. சனநாயக ஆட்சிமுறையின் **இரண்டு** பிரதான பிரிவுகளைக் குறிப்பிடுக

(2 புள்ளிகள்)

ii. சனநாயக சமூகத்தின் நிலைப்புக்காக சுதந்திர ஊடகங்களால் நிறைவேற்றப்படவேண்டிய பொறுப்புக்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

iii. (a) இலங்கையின் மத்திய அரசாங்கத்தின் கட்டமைப்பில் உள்ள துறைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

(b) மேற்கூறிய துறைகளில் **ஒன்றினை** விளக்குக.(2 புள்ளிகள்)

**3.“சமூகத்தில் உள்ள எல்லாச்சவால்களையும் எதிர்கொள்வதற்கான கூறுகள் பண்பாட்டில் அடங்கி உள்ளன”**
i. பண்பாடு தொடர்பாக வரைவிலக்கணங்களை முன்வைத்த **இரண்டு** அறிஞர்களைப் பெயரிடுக.

(2 புள்ளிகள்)

ii. பன்மைப்பண்பாட்டுச்சமூகத்தில் அடிப்படைப்பண்புகள் **மூன்றினைக்**குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

iii. (a) இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்தியகாரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.(3 புள்ளிகள்)
(b) மேற்கூறிய காரணிகளில்**ஒன்றினை** விளக்குக. (2 புள்ளிகள்)



kalvi.lk

**4. "மனிதர்கள் சமூகத்தில் இணைந்து வாழும்போது பல்வேறு தேவைகளும் விருப்பங்களும் உருவாகின்றன."**

i. மனிதர்களின் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான அடிப்படைத்தேவைகள் **இரண்டினை** எழுதுக.
(2 புள்ளிகள்)

ii. பொருளாதாரம் ஒன்றில் நடைபெறும் பல்வேறு செயற்பாடுகளின் பிரதான **மூன்று** பிரிவுகளைக் குறிப்பிடுக..
(3 புள்ளிகள்)

iii. (a) உற்பத்திக்காரணிகள் **மூன்றினைக்**குறிப்பிடுக.
(3 புள்ளிகள்)

(b) மேற்கூறிய காரணிகளில் **ஒன்றினை** விளக்குக.
(2 புள்ளிகள்)

**5. "மனதளவில் சமாதானத்தை உருவாக்குவதன் மூலம் மோதல் நிலையைக்குறைக்கவோ அல்லது நீக்கவோ முடியும்"**

i. மனதில் அமைதியை ஏற்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகள் **இரண்டினைக்**குறிப்பிடுக.
(2 புள்ளிகள்)

ii. மோதல் ஏற்படுவதற்கான காரணங்கள் **மூன்று** குறிப்பிடுக.
(3 புள்ளிகள்)

iii. (a) மோதல்களை சமதானமாகத்தீர்ப்பதனால் ஏற்படும் பயன்கள் **மூன்று** தருக.
(3 புள்ளிகள்)

(b) மேற்கூறிய பயன்களில் **ஒன்றினை** விளக்குக.
(2 புள்ளிகள்)

**6. "சட்டத்தை மதித்தலும் , சட்டத்துக்குக் கீழ்ப்படிதலும் ஒவ்வொரு பிரைசைகளினதும் கடமையாகும்."**

i. நீதியை நிலைநாட்டுவதில் முக்கியத்துவம் பெறும் **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக.
(2 புள்ளிகள்)

ii. உள்நாட்டுச்சட்டங்களின் **மூன்று** பிரிவுகளைக் குறிப்பிடுக.
(3 புள்ளிகள்)

iii. (a)இலங்கையில் தற்போது நடைமுறையில் காணப்படும் **மூன்று** உயர்நிலை நீதி மன்றங்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)(b)மேற்கூறிய நீதிமன்றங்களில் **ஒன்றின்** நீதி அதிகாரங்கள் **இரண்டினை** எழுதுக.
(2 புள்ளிகள்)

**7. "மக்களுக்கான சேவைகளை பிரதேசரீதியாக வினைத்திறன் மிக்கதாகவும்விளைதிறன் மிக்கதாகவும் வழங்கும் நிறுவனங்கள் உள்ளூராட்சி மன்றங்களாகும்."**

i. இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.
(2 புள்ளிகள்)

ii. உள்ளூராட்சி மன்றங்களின் பயன்கள் **மூன்று** எழுதுக.
(2 புள்ளிகள்)

iii. (a) இலங்கைப் பிரசைகள் தொடர்பாக மேற்கூறிய உள்ளூராட்சி நிறுவனங்களின் பொறுப்புக்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(b) மேற்கூறிய உள்ளூராட்சி நிறுவனங்களின் பொறுப்புக்களில்` **ஒன்றினை** விளக்குக.
(2 புள்ளிகள்)



kalvi.lk